**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 145** **நாள் : 27.10.2017**

## வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு தொழில்துறை முதன்மைச் செயலாளர் திரு.அதுல்யா மிஷ்ரா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்களின் முன்னிலையில் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது

பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் மாளிகையில் இன்று (27.10.2017) தொழில் துறை முதன்மைச் செயலாளர் திரு.அதுல்யா மிஷ்ரா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 15 மண்டலங்களுக்கும் கண்காணிப்பு அலுவலர்களாக நியமிக்கப்பட்ட இந்திய ஆட்சி பணியின் அலுவலர்கள் மற்றும் பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை, சென்னை குடிநீர் வடிகால் துறை, மின்சார வாரியம், போக்குவரத்து காவல்துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் ஆகிய பல்வேறு துறைகளின் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய முக்கிய பணிகள் குறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் அவர்கள், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் ஆகியோருடன் ஆய்வுக்கூட்டம் நடத்தப்பட்டு ஆலோசனைகள் வழங்கியதன் அடிப்படையில், ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஒரு இந்திய ஆட்சிப் பணி நிலையில் உள்ள அலுவலர்கள் நியமிக்கப்பட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளது.

புயல் மற்றும் அடைமழைக் காலங்களில் மாநகராட்சி பணியாளர்கள் 200 வார்டுகளிலும் விடுமுறை நாட்கள் உட்பட நாள்முழுவதும் பணி செய்திட தயார்நிலையில் வைத்திட வேண்டும். தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்களை அங்கிருந்து அகற்றி அருகாமையில் உள்ள நிவாரண மையங்களுக்கு அழைத்து சென்று தங்க வைக்க ஏதுவாக நிவாரண மையங்கள் அனைத்து தயார்நிலையில் வைக்க வேண்டும். வடகிழக்கு பருவமழையை ஒட்டி பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் மேற்கொள்ளப்பட வேண்டிய அனைத்து முன்னெச்சரிக்கை

நடவடிக்கைகளையும் மண்டலங்களுக்கு நியமிக்கப்பட்ட கண்காணிப்பு அலுவலர்கள் முன்நின்று பணியாற்றிட வேண்டும் என கூட்டத்தில் தெரிவித்தார்.

கீழ்க்கண்ட அலுவலர்கள் தொழில்துறை முதன்மைச் செயலாளர் **திரு.அதுல்யா மிஷ்ரா, இ.ஆ.ப., அவர்கள்** தலைமையில் கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை அலுவலர்களாக தமிழக அரசால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

| வ.எண் | அலுவலர் பெயர் | மண்டலம் |
|---|---|---|
| 1. | திருமதி.ஆர்.லில்லி, இ.ஆ.ப.,<br>உயர்கல்வித்துறை இணைச் செயலாளர் | திருவொற்றியூர் மண்டலம்–1 |
| 2. | திருமதி.மரியம் பல்லவி பல்தேவ், இ.ஆ.ப.,<br>அமலாக்கம் மற்றும் வணிகவரித்துறை இணை ஆணையாளர் | மணலி மண்டலம்–2 |
| 3. | திரு.சந்தோஷ் பாபு, இ.ஆ.ப.,<br>தமிழ்நாடு ஆதிதிராவிட வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் | மாதவரம் மண்டலம்–3 |
| 4. | டாக்டர்.தாரேஸ் அகமது, இ.ஆ.ப.,<br>மாநில ஊரக சுகாதாரத் திட்ட இயக்குநர் | தண்டையார்பேட்டை மண்டலம்–4 |
| 5. | டாக்டர்.பி.உமாநாத், இ.ஆ.ப.,<br>தமிழ்நாடு மருத்துவ பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் | இராயபுரம் மண்டலம்–5 |
| 6. | திரு.சி.காமராஜ், இ.ஆ.ப.,<br>பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத்துறை | திரு.வி.க.நகர் மண்டலம்–6 |
| 7. | திரு.எம்.பாலாஜி, இ.ஆ.ப.,<br>வணிகவரித்துறை இணை ஆணையாளர் | அம்பத்தூர் மண்டலம்–7 |
| 8. | டாக்டர்.ஆர்.ஆனந்தகுமார், இ.ஆ.ப.,<br>நிதித்துறை கூடுதல் செயலாளர் | அண்ணாநகர் மண்டலம்–8 |
| 9. | திரு.ஆர்.செல்வராஜ், இ.ஆ.ப.,<br>தமிழ்நாடு அச்சு மற்றும் காகித நிறுவன மேலாண்மை இயக்குநர் | தேனாம்பேட்டை மண்டலம்–9 |
| 10. | திரு.சி.விஜயராஜ் குமார், இ.ஆ.ப.,<br>சென்னை பெருநகர வளர்ச்சி குழும (CMDA) உறுப்பினர் செயலாளர் | கோடம்பாக்கம் மண்டலம்–10 |
| 11. | திரு.ஆர்.கிர்லோஷ் குமார், இ.ஆ.ப.,<br>தமிழ்நாடு வாணிபக் கழக (Tasmac) உறுப்பினர் செயலாளர் | வளசரவாக்கம் மண்டலம்–11 |

| | | |
|---|---|---|
| 12. | திருமதி.பூஜா குல்கர்னி, இ.ஆ.ப.,<br>நிதித்துறை கூடுதல் செயலாளர் | ஆலந்தூர் மண்டலம்–12 |
| 13. | டாக்டர்.எஸ்.ஸ்வர்ணா, இ.ஆ.ப.,<br>பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை அரசு செயலாளர் (P & AR) | அடையாறு மண்டலம்–13 |
| 14. | டாக்டர்.ஆர்.பழனிச்சாமி, இ.ஆ.ப.,<br>புவியியல் மற்றும் சுரங்கத்துறை ஆணையாளர் | பெருங்குடி மண்டலம்–14 |
| 15. | திருமதி.மைதிலி கே.ராஜேந்திரன், இ.ஆ.ப.,<br>பொதுத்துறை அரசு கூடுதல் செயலாளர் | சோழிங்கநல்லூர் மண்டலம்–15 |
| 16 | திருமதி,அனு ஜார்ஜ், இ.ஆ.ப.,<br>சர்க்கரை உற்பத்தி கழக இயக்குநர் | பெருநகர சென்னை மாநகராட்சி தலைமையிடம் |

பொதுமக்கள் தங்கள் புகார்களை பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் அமைக்கப்பட்டுள்ள 24 மணிநேரமும் இயங்கும் கட்டுப்பாட்டு அறையில் உள்ள 044–2536 7823, 2538 4965, 2538 3694 2561 9206 என்ற தொலைபேசி எண்களிலும், 94454–77662 மற்றும் 94454–77205 என்ற வாட்ஸ்ஆப் எண்களிலும் தெரிவிக்கலாம்.

இக்கூட்டத்தில், சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.வி.அன்புச்செல்வன், இ.ஆ.ப., காவல்துறை கூடுதல் ஆணையாளர் திரு.எம்.சி.சாரங்கன், இ.கா.ப., வருவாய் நிர்வாக ஆணைகத்தின் இணைச் செயலாளர் திருமதி.எம்.லட்சுமி, இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி துணை ஆணையாளர் (வருவாய் (ம) நிதி) திருமதி.ஆர்.லலிதா, இ.ஆ.ப., துணை ஆணையாளர் (பணிகள்) திரு.எம்.கோவிந்த ராவ், இ.ஆ.ப., துணை ஆணையர் (சுகாதாரம்) திருமதி.எம்.விஜயலட்சுமி, இ.ஆ.ப., துணை ஆணையாளர் (கல்வி) திருமதி.மகேஸ்வரி ரவிக்குமார், இ.ஆ.ப., தெற்கு வட்டார துணை ஆணையாளர் திரு.கோபால சுந்தர ராஜ், இ.ஆ.ப., தலைமைப் பொறியாளர் திரு.எம்.புகழேந்தி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு:** **துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்**
**பெருநகர சென்னை மாநகராட்சி**